செ. கு. எண்: 019 நாள்: 07.02.2019

**மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் அரசால் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட 2வது உலக முதலீட்டாளர்கள் மாநாடு குறித்து திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் விரக்தி பேச்சுக்கு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்களின் மறுப்பு அறிக்கை**

**--------------**

தமிழ்நாடு அரசு நடத்திய இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு கடந்த ஜனவரி 23 மற்றும் 24 ஆம் தேதிகளில் வெற்றிகரமாக நடைபெற்றது. இம்மாநாட்டில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் முக்கிய தொழிலதிபர்கள், தொழில் முனைவோர், தொழில் நிறுவன பிரதிநிதிகள், இந்திய மற்றும் வெளிநாட்டு தொழில் கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள், ஐந்து வெளிநாட்டு தூதர்கள், நாற்பதுக்கும் மேற்பட்ட வெளிநாடுகளின் துணைத் தூதர்கள், பல்வேறு நாடுகளின் அரசு பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாடு தமிழ்நாடு அரசால் மிக வெற்றிகரமாக நடத்தப்பட்டதைப் பொறுத்துக்கொள்ள முடியாத திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சாலையில் சென்றவர்களை கோட்டு சூட்டு போட்டு அழைத்து வந்து மாநாட்டில்

உட்காரவைத்தனர், கடன்காரர்களோடு ஒப்பந்தம் போட்டனர் என்றெல்லாம் பேசியுள்ளது திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் விரக்தியின் உச்சகட்டத்திற்கே சென்றுவிட்டதையே காட்டுகிறது.

இந்தியாவின் புகழ்பெற்ற முன்னணி நிறுவனங்களாகிய டி.வி.எஸ் குழுமம், எம்.ஆர்.எப், சன்மார் குழுமம், ராம்கோ குழுமம், அதானி குழுமம், பிர்லா குழுமம் போன்றோரும், பிரான்ஸ் நாட்டு கார் தயாரிப்பு நிறுவனமாகிய பி.எஸ்.ஏ. குழுமம், கொரிய நிறுவனங்களாகிய ஹூண்டாய் மற்றும் மேன்டோ, பின்லாந்து நாட்டு நிறுவனமாகிய சால்காம்ப், ஜப்பானின் யான்மார் மற்றும் யமஹா, அமெரிக்காவின் வேப்கோ, ஜெர்மனி நாட்டின் ஷுவிங் ஸ்டெட்டர் மற்றும் ஷேஃப்ளர் உள்ளிட்ட பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களும் தமிழ்நாட்டில் முதலீடு செய்திட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இரண்டாவது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் போது கையெழுத்திட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கும் சிறப்புமிக்க பல தொழில் முனைவோர் உலகப்புகழ்பெற்ற தொழில் துறையினர், பன்னாட்டு அரசுப் பிரதிநிதிகள் என பலரையும் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், சாலையில் சென்றவர்களை கோட்டு சூட்டு போட்டு அழைத்து

வந்து மாநாட்டில் உட்கார வைத்தனர் என்றெல்லாம் அவதூறாக கூறியுள்ளது அவரது அறியாமையையே காட்டுகிறது. அனைத்து வகை கலாச்சாரங்களையும் சமமாக மதிக்கும் தமிழ்நாடு அரசு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்பவர்களுக்கு எவ்வித உடைக்கட்டுப்பாட்டையும் விதிக்கவில்லை. கோட்டு சூட்டு போட்டவர்கள் மட்டுமல்ல, வேட்டி கட்டிய தங்கள் பாரம்பரிய உடையில் வந்த பலரும் கூட புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளனர். எனவே கோட்டு சூட்டு போட்டவர்கள் மட்டுமே தொழில் அதிபர்கள் என்பதைப் போல திரு.ஸ்டாலின் அவர்கள் பேசியது தொழில் முனைவோரை கொச்சைப்படுத்தும் செயலாகும்.

எந்த ஒரு தொழில் முதலீட்டிலும் 20 முதல் 30 சதவீதம் முதலீடு முதலீட்டாளர் பங்குத் தொகையாகவும் (Equity) மீதமுள்ள 70 முதல் 80 சதவீதம் வரை கடன்கள் (Debt) மூலமும் திரட்டி முதலீடு செய்வதும் உலகெங்கும் உள்ள இயல்பான தொழில் நடைமுறையாகும். திமுக ஆட்சியில் போடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இவ்வாறே இருந்தன. இந்த அடிப்படையைக் கூட உணராமல், தொழில் துறை அமைச்சராக இருந்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்த

முதலீட்டாளர்களை எல்லாம் பொத்தாம் பொதுவாக கடனாளிகள் என கூறுவது ஏற்புடையதல்ல.

தமிழ்நாட்டு மக்களை நம்பி இங்கு முதலீடு செய்து நாட்டின் வளர்ச்சிக்காக பாடுபடும் தொழில் முனைவோரை தெருவில் போவோர் என்றும் கடனாளிகள் என்றும் வசை பாடுவதுதான் அவருக்கு அழகா ?

கடந்த திமுக ஆட்சியில் **4.8.2010** அன்று வீடியோகான் (Videocon) குழுமத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. தற்போது அந்த நிறுவனம் திவால் நிலைக்கு சென்றுள்ளதையும், அந்நிறுவனத்தைச் சேர்ந்த சில முக்கிய நபர்கள் மீது பொருளாதார குற்றச்செயல்கள் புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டு குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் அனைவரும் அறிவர். மேலும் திமுக ஆட்சியில் **2007**-ஆம் ஆண்டு கபாரோ குழுமத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. கபாரோ (Caparo) நிறுவனம் **2015**ஆம் ஆண்டு திவால் நிலைக்கு சென்றுள்ளது. மேலும், திமுக ஆட்சில் **9.6.2008** அன்று மேசர்பேயர் (Moserbaer) நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அக்குழும நிறுவனங்களில் ஒன்றும் பின்னாளில் திவால் நிலைக்கு சென்றுள்ளது.

கடந்த திமுக ஆட்சியில் பெரும் விளம்பரத்துடன் செய்யப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்கள் செயல்பாட்டிற்கு வராமலேயே முடங்கிவிட்டன. சிக்னெட் சோலார், வீடியோகான் போன்ற நிறுவனங்களுடன் மேற்கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களே இதற்கு சான்றாகும்.

கடந்த திமுக ஆட்சியின் போது, 2007 ஆம் ஆண்டில் அப்போதைய அரசால் வெளியிடப்பட்ட தொழிற் கொள்கையின்படி குறைந்த பட்ச முதலீட்டு காலக்கெடுவாக மூன்றாண்டு காலம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. முதலீட்டின் அளவைப் பொருத்து பல்வேறு நிறுவனங்களுக்கு முதலீட்டு காலம் 7 ஆண்டுகள் வரை வழங்கப்பட்டது. தற்போது நடைமுறையில் உள்ள 2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தொழில் கொள்கையின்படியும் முதலீட்டாளர்களுக்கு முதலீட்டுக்காலமாக மூன்று முதல் ஏழு ஆண்டுகள் வழங்கப்படுகிறது. உலகெங்கும் உள்ள பொதுவான நடைமுறையும் அதுவே. கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்ட நிறுவனங்கள் பல முதலீட்டிற்கு அனுமதிக்கப்பட்ட காலக்கெடுவிற்கு முன்னதாகவே தங்களது தொழிற்சாலைகளைத் தொடங்கி உற்பத்தியைத் துவங்கி

விட்டன. முதலீட்டிற்கு அனுமதிக்கப்பட்ட காலக் கெடுவாகிய ஏழு ஆண்டுகால நிறைவில் இன்னும் ஏராளமான தொழில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியைத் துவங்கிவிடும். இது குறித்த விரிவான அறிக்கை ஏற்கனவே மாண்புமிகு அம்மாவின் அரசால் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் அந்நிய நேரடி முதலீடு 21 சதவிகிதம் குறைந்து விட்டதாக திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். மார்ச் முதல் செப்டம்பர் 2018 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாட்டின் அந்நிய நேரடி முதலீடு ரூ.10,892 கோடியாக இருந்தது. இது 2017 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் ரூ.13,898 கோடியாக இருந்தது. இதே காலகட்டத்தில் இந்தியாவின் மிகப்பெரிய பொருளாதாரமான மகாராஷ்ட்ராவில் அந்நிய நேரடி முதலீடு 43 சதவிகிதம் குறைந்தது. எனவே, ஆறு மாத காலத்தில் ஏற்பட்ட சில வேறுபாடுகளை மட்டும் கருத்தில் கொண்டு தொழில் துறையில் முன்னணி மாநிலங்களாகிய தமிழ்நாட்டிலோ, மகாராஷ்ட்ராவிலோ அந்நிய முதலீடு குறைந்து விட்டதாக பொத்தாம் பொதுவாக தெரிவிப்பது ஏற்புடையதல்ல.

அந்நிய நேரடி முதலீடுகள் தொடர்பான புள்ளிவிவரங்களை நீண்ட கால நோக்கில் அணுகுவதே சரியான நடைமுறை.

அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு தொடர்ந்து இந்தியாவில் நான்காவது இடத்தில் உள்ளது. குஜராத் மாநிலத்தைவிட அதிக அந்நிய நேரடி முதலீடு தமிழ்நாட்டிற்கு வரப்பெற்றுள்ளது. மேலும், கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை 28.8 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அந்நிய நேரடி முதலீடு தமிழ்நாட்டிற்கு வரப்பெற்றுள்ளது. இதில் மே 2011 முதல் செப்டம்பர் 2018 வரை மட்டும் வரப்பெற்ற அந்நிய நேரடி முதலீடு 21.5 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். ஆக கடந்த 8 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு வரப்பெற்ற அந்நிய நேரடி முதலீடு அதற்கு முந்தைய 10 ஆண்டுகளில் வரப்பெற்றதைக்காட்டிலும் 3 மடங்காகும். எனவே ஆறு மாத கால கணக்கை மட்டும் வைத்துக் கொண்டு புள்ளிவிவரங்களை குறுகிய நோக்கில் அணுகி மக்களை திசைதிருப்புவதை திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இனியாவது தவிர்த்திட வேண்டும்.

உலகத் தொழில்கள் உயர்ந்து சிறக்கும் மாநிலமான தமிழ்நாடு மேலும் உயர்வு பெற்று, தொடர்ந்து தொழில் வளர்ச்சியில் பீடு நடைபோட்டு முன்னேறிட மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. சிறப்புற

நடைபெற்ற இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாட்டில் பல்வேறு தொழில் முனைவோர் அறிவித்துள்ள 3,00,431 கோடி ரூபாய் அளவிற்கான புதிய தொழில் முதலீடுகளே மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் சாதனைக்கு சான்றாக அமைந்துள்ளன. மாநாட்டின் பெருவெற்றியை பொறுக்கமாட்டாமல் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக முதலீட்டாளர்கள் மீது அடிப்படையற்ற அவதூறு கருத்துக்களைப் பரப்புவதை திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

**எம்.சி.சம்பத்**
தொழில் துறை அமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**